IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
OS.No.352/2007

| DEPOSITION OF WITNESS | DW.1 |
|---|---|

| NAME | தாமோதரன் |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 30.08.2023

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1.இந்த வழக்கில் நான் முதல் பிரதிவாதி. நான் பி.எஸ்.சி படித்துள்ளேன். நான் Retd Defence Officer ஆக பணியாற்றி 20 வருடத்திற்கு முன்பு ஓய்வு பெற்று விட்டேன். நான் தற்போது Stamp Vendors ஆக சென்னை அண்ணா நகரில் எனது வீட்டில் பணியாற்றி வருகிறேன்.

2.பி.சா.ஆ.1 பத்திர தாளை நான் தான் எனது பெயரிலும், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் பெயரில் விற்பனை செய்தேன். எனது மாமனார் பெயர் முத்துராமலிங்கம் அவர் தற்போது உயிருடன் இல்லை. முத்துராமலிங்கம் மகன் 3 வது பிரதிவாதியின் மகன் ராமு ஆவார். பி.சா.ஆ,.1 ல் ராமு என்பவர் சாட்சியாக கையொப்பம் இட்டுள்ளார் அவர் உயிருடன் தான் உள்ளார். பி.சா.ஆ.1 ன் மற்றொரு சாட்சி சார்பதிவாளர் அலுவலகத்தில் கையொப்பம் இட்டார் அவர் யார் என்று தற்போது ஞாபகம் இல்லை.

3.எனக்கு தற்போது 77 வயது ஆகிறது. எனது முதல் பிரமாண வாக்கு மூலத்தில் எனக்கு தற்போது 55 வயது ஆகிறது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது தவறுதலாக பதிவாகி உள்ளது. 2 வது பிரதிவாதி எனது மனைவி உயிருடன் உள்ளார். 3 வது பிரதிவாதி எனது மாமியார் தற்போது உயிருடன் இல்லை. சுமார் 2 வருடத்திற்கு முன்பு எனது மாமியார் இறந்து விட்டார்.

4.எனது மாமியாருக்கு ராமு, மற்றும் 2 வது பிரதிவாதியான எனது மனைவி மட்டும் தான் வாரிசுகள். ராமுவுக்கு 52 வயது ஆகும். ராமு என்பவர் சென்னையில் உள்ளார். எனது மாமியார் இறந்து போன விவரத்தை எனது முதல் பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லவில்லை என்றாலும் நீதிமன்றத்திற்கு அவர் இறந்த விவரத்தை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் வேண்டுமென்றே எனது மாமியார் இறந்த விவரத்தை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

5.ராமு என்பவர் தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறார். அவருடைய முகவரி எனக்கு தெரியாது.

3 வது பிரதிவாதி இறந்து விட்டகாரணத்தினால் அவரின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்காததால் அதற்குண்டான நடவடிக்கைகள் எடுப்பதற்காக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.Rajananhivarmasiva,
District Munsif,
Gudiyattam.